1972 மார்ச் 20]

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலுள்ள வேலைவாய்ப்பின்மைக்கு முக்கிய காரணம் மத்திய அரசு மேற்கொள்ளும் கொள்கைகள் என்று நம்பப்படுவதால், இந்தக் குழு அதற்கேற்றவாறு பரிந்துரை செய்ய முன்வராவிடில் நம் அரசு அது பற்றி மேற்கொள்ளவிருக்கும் கொள்கையினை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஏராளமான தொழிற்சாலைகள் நாட்டில் பெருக்கப்படவேண்டுமென்று பொருளாதார அடிப்படையில் மத்திய அரசு கொள்கைகளை வகுக்கவேண்டுமென்று நாம் வற்புறுத்தி வருகிறோம். இந்த வேலையில்லாத் திண்டாட்டத்தைப் பரிசீலிப்பதற்கு அகில இந்திய அடிப்படையில் மத்திய அரசு ஒரு குழு அமைத்துள்ளது. அந்தக் குழுவிற்கு ஆலோசனை கூறி ஒத்துழைப்பு தருவதற்கு நம் மாநில சார்பில் நான் முன்னர் குறிப்பிட்டபடி ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது.

THIRU K. M SUBRAMANIAM : Sir, in this Committee are there only officials or are there public men who are deeply involved in this sort of unemployment problem?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அகில இந்தியக் குழுவில் நாடாளுமன்ற உறுப்பினர்களும் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். அலுவலர்களும் இருக்கிறார்கள். ஒரு சட்டமன்ற உறுப்பினர் தலைவராக இருக்கிறார். நம்முடைய மாநிலத்தைப் பொறுத்த அளவில் அரசுக்கு உதவி செய்வதற்காக நியமிக்கப்பட்டிருக்கும் காரணத்தால், அலுவலர்கள் மட்டுமே இந்தக் குழுவில் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

ஊராட்சிகளிலுள்ள சாலைகள்

*585 வினா—திரு. கே. என். குமாரசாமி : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பஞ்சாயத்தினால் பராமரிக்க முடியாத ரோடுகளை (பஸ் போக்குவரத்து மார்க்கம்) அரசாங்கம் ஹைவேஸ் மூலம் பராமரிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஆம்.

திரு. சு. துரைசாமி : அமைச்சர் அவர்கள் "ஆம்" என்று சொன்னார்கள். எவ்வளவு ஆண்டுக் காலத்தில் அந்தப் பாதைகளை எல்லாம் அரசாங்கப் பாதைகளாக மாற்றும் செயற்குறிப்பு இருக்கிறது?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : பஸ் போக்குவரத்து மார்க்கத்திலுள்ள பஞ்சாயத்து யூனியன் சாலைகளில் ஆயிரம் மைல்களை அரசு இந்த ஆண்டு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று உத்தரவு போட்டிருக்கிறது. மொத்தம் 3,000 மைல் இருப்பதாகக் கணக்கிட்டிருக்கிறார்கள். மூன்றாண்டுக் காலத்திற்குள்ளாக இந்தச் சாலைகள் முழுவதையும் அரசு மேற்கொள்ள வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

திரு. கு. அ. பொம்மன் : இந்தத் தடங்களை எடுத்துக் கொள்வது எந்தெந்த மாவட்டங்களில் என்று அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : எந்தெந்த மாவட்டங்களில் என்ற விவரம் இல்லை. இப்படி எடுத்துக்கொள்ளும் போது டி.டி.சி.-ல் பிரையாரிடி கொடுத்து சிபாரிசு செய்வது பற்றிப் பரிசீலிக்கப்பட்டு அரசாங்கத்திற்குத் தெரிவித்து நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

திரு. எம். ஏ. லத்தீப் : ஆயிரம் மைல்களை எடுத்துக் கொள்வது என்று சொல்லுவதற்குப் பதிலாக ஒன்றியத்தினுடைய சாலைகளிலே எங்கெங்கு பஸ்கள் ஓடுகின்றனவோ, அவைகளை எல்லாம் எடுத்துக் கொள்ள அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அதைத்தான் சொன்னேன். ஒன்றியத்தில் பஸ் ஓடுகின்ற சாலைகளை எடுத்துக் கொள்வது என்று கொள்கை அளவில் முடிவு செய்யப்பட்டிருக்கிறது. அதன் அடிப்படையில் மொத்தம் மூவாயிரம் மைல்கள் இருக்கின்றன. இந்த ஆண்டு ஆயிரம் மைல்களை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. தொடர்ந்து மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. கே. எம். இராசகோபால் : ஒன்றியத்திலுள்ள பஸ் பாதைகளை எடுத்துக்கொள்ள நீண்ட நெடுங்காலம் ஆகிறது. அதை எடுத்துக் கொள்கிற வரையில் பஸ் மூலம் வருகிற டாக்ஸை ஒன்றியத்திற்குக் கொடுத்து அவர்கள் அதைப் பராமரிப்பதற்கு வழி செய்வார்களா?

1972 மார்ச் 20]

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இதுபற்றித் தனியாகக் கேள்வி போட்டால், விவரம் சொல்ல முடியும். கேள்வி அரசாங்கம் அந்தச் சாலைகளை எடுத்துக் கொள்வது பற்றி. அரசாங்கத்தின் வருமானத்தில் பங்கு கேட்பது பற்றித் தனியாகக் கேட்க வேண்டும்.

திரு. எஸ். ஆறுமுகம்: அமைச்சர் அவர்கள் ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள பஸ் போகும் பாதைகளை மட்டும் அரசு ஆயிரம் மைல்கள் எடுத்துக் கொள்ளப் போவதாகச் சொல்லியிருக்கிறார்கள். பஸ் ரூட்டுகள் இல்லாமல் இருக்கும் பாதைகளைப் பற்றியும் மனத்தில் கருதி முக்கியமான பொதுப் பாதைகளை அரசு எடுத்துக் கொள்ள முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இதற்காகத்தான் இணைப்புச் சாலைகளுக்கென்று தனியாக ஒரு திட்டம் போடப்பட்டிருக்கிறது. டி.டி.சி. கூட்டத்தில் தீர்மானம் போட்டு அனுப்பிய தற்கேற்ப அரசு மேற்கொண்டு நடவடிக்கை எடுத்துக் கொள்கிறது.

தமிழ்நாட்டில் இணைப்புச் சாலைகள்

*586 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1971–72ல் தமிழகத்தில் விவசாய விளை பொருட்கள் எடுத்துச் செல்லும் இணைப்புச் சாலைகள் அமைத்திட மத்திய அரசு நிதி ஒதுக்கீடு செய்துள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் எஞ்சியுள்ள மூன்று ஆண்டுக்கால அளவில் ரூ. 1.50 கோடி நிதி உதவி வரம்புக்குள், மத்திய அரசுத் துறையின் கீழ், தமிழ் நாட்டில் காவிரிப்பாசனப் பகுதியில் (தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, தென் ஆற்காடு மாவட்டங்கள்) அங்காடிகளையும் இணைப்புச் சாலைகளையும் ஏற்படுத்துவதை முக்கியமாகக் கொண்ட பகுதி வளர்ச்சித் திட்டம் ஒன்றுக்கு இந்திய அரசு ஏற்பளித்துள்ளது.

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, தமிழகத்தில் மிக அதிகமான விளைபொருள்களை உற்பத்தி செய்து தருகின்ற தஞ்சை மாவட்டத்திற்கு இத்தகைய இணைப்புச் சாலைகளை அதிகமாக ஆக்கித் தர அரசு ஆலோசனை செய்ய முன்வருமா?